# இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 153/2025 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. சுஜாகரன் | | |
| த/பெ. | : திரு. | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 33 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 36 AH 5330 வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

TN 36 AH 5330 வாகனத்தின் ஓட்டுநர் தான் விபத்தை ஏற்படுத்தியதாக போலீசார் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கையிலும், இறுதி அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது எங்களது ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் இல்லை. போலீசார் தாக்கல் செய்த இறுதி அறிக்கையிலும்

குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனம் விபத்து சமயத்தில் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பிற்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.